**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08 ஆம் நாள் திங்கள்கிழமை**

**இ.ம.எண்.4/2025**
**இன்**
**மே.மு.வ.எண்.14/2024**

சேக் அப்துல்லா --- மனுதாரர்/மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பழனி அடிவாரம் மேற்கு கிரிவீதியில்
அமைந்துள்ள கல்லலையான்
(சலவையாளர்) பொது மடம்.
1. அதன் தலைவர் திரு.மாடசாமி (இறப்பு)
2. அதன் செயலாளர் திரு.நாகராஜன்
3. அதன் நிர்வாகி திரு.மாரிமுத்து. --- எதிர்மனுதாரர்கள்/
எதிர்மேல்முறையீட்டாளர்கள்

இந்த மனுவானது 08.08.2025 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் M.காளிதாஸ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் T.K.அனந்தசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மே.மு.வ.எண்.14/2024 மேல்முறையீட்டு வழக்கில் தீர்ப்பு ஏற்படும் வரை தாவா கடையை மனுதாரர்/அப்பீல் வாதி வாடகைதாரர் என்ற முறையில் அமைதியாக டீ கடை நடத்தி வருவதை 2,3 அப்பீல் எதிர்வாதிகளோ, அவர்களது வகை ஆட்களோ தடையோ இடைஞ்சல்களோ செய்யக்கூடாதென இடைக்கால உறுத்துக் கட்டளை

பிறப்பிக்கும்படி கோரி உ.வி.மு.ச.கட்டளை 39, விதி 1 மற்றும் 2ன்படி மனுதாரர்/அப்பீல் வாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/மேல்முறையீட்டளார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:–**

மனுதாரர் மேல்முறையீட்டு வழக்கில் மேல்முறையீட்டாளர். மனுதாரர் பழனி அடிவாரம் மேற்கு கிரி வீதியில் அமைந்துள்ள கல்லலையான் சலவையாளர் பொதுமடத்திற்குப் பாத்தியப்பட்ட கடையை வாடகைக்குப் பிடித்ததில் மடத்தின் தலைவர் மனுதாரருக்கு வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்து கொடுத்துள்ளார். பின்பு எதிர்மேல்முறையீட்டாளர்கள் அனைவரும் பணம் பெற்றுக் கொண்டு வாடகை உடன்படிக்கையை கால நீட்டிப்பு செய்து கொடுத்தனர். அதன்படி மனுச் சொத்தில் உள்ள கடை எண்.1–ல் ஊட்டி காபி பார் என்ற பெயரில் மனுதாரர் டீக்கடை வைத்து நடத்தி வருகிறார். மடத்தின் தலைவரிடம் மனுதாரர் மாத வாடகையை ரொக்கமாகவும் அவர் கேட்டுக்கொண்டபடி மடத்துக்கு செலுத்த வேண்டிய மொத்த சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டண வரியும் மனுதாரர் செலுத்தி வந்தார். இந்நிலையில் பிரதிவாதிகளுக்குள் மடத்தின் நிர்வாகம் குறித்து பிரச்சினைகள் ஏற்பட்டு வழக்குகள் நடந்து வந்தது. அதனால் 2,3 பிரதிவாதிகள் தனித்தனியே மனுதாரரிடம் வாடகையை தங்களிடம் தான் கொடுக்க வேண்டும் என்றும், கூடுதல் முன்பணம் கொடுக்க வேண்டும் என்றும் மிரட்டினர். மனுதாரரை சட்டப்படி அல்லாமல் பலாத்காரமான முறையில் வெளியேற்றக் கூடாது என பரிகாரம் கோரி பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.117/2018 என்ற வழக்கை மனுதாரர் தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் போது மடத்தின் தலைவர் மாடசாமி இறந்துவிட்டதால் அவரை விசாரணை செய்ய இயலாததால் அசல் வழக்கு கடந்த 09.02.2024 அன்று தள்ளுபடியானது. வழக்கு நிலுவையில் இருந்தபோதும், தீர்ப்புக்கு பின்பும் வாடகை கேட்டோ மனுதாரரை சட்டப்படி காலி செய்யவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொதுமடத்திற்கு பாத்தியப்பட்ட கடை என்பதால் நிர்வாகிகளாக இருக்கும் வரை சம்பாதித்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் கூடுதல் முன்பணம் என்ற பெயரில் பிரதிவாதிகள் மனுதாரரிடம்

தனித்தனியே பல லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டு ரசீது எதுவும் வழங்காமல் மனுதாரரை தொடர்ந்து கடை நடத்த அனுமதித்து வந்தனர். தாவா கடைக்கு ரூபாய் பத்து லட்சத்திற்கும் மேல் எதிர்மேல்முறையீட்டாளர்களிடம் கொடுத்துள்ளார். அதற்கு எதிர்மேல்முறையீட்டாளர்கள் ரசீது எதுவும் கொடுக்காமல் வாய்மொழியாகவே அனுமதி கொடுத்தனர். எதிர்மேல்முறையீட்டாளர்கள் பணம் கேட்டு தொந்தரவு செய்ததால் வாடகையை நீதிமன்றத்தில் செலுத்துவதற்காக RLTOP 3/2023 என்ற மனுவை மனுதாரர் தாக்கல் செய்தார். அதனால் கோபமுற்ற எதிர்மேல்முறையீட்டாளர்கள் மனுதாரரை சட்ட விரோதமாக காலி செய்யும் நோக்கத்துடன் 24.04.2025 அன்று தாவா கடைக்கு அடியாட்களுடன் வந்து கடையின் மேற்கூரையை இடித்தனர். பழனி அடிவாரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எதிர்மேல்முறையீட்டாளர்களின் சட்ட விரோத நடவடிக்கையை மனுதாரர் தடுத்துக்கொண்டார். எனவே மேல்முறையீட்டு வழக்கில் தீர்ப்பு ஏற்படும் வரை மனுதாரர் தாவா கடையை வாடகைதாரர் என்ற முறையில் நடத்தி வருவதற்கு 2,3 எதிர்மனுதாரர்கள் எவ்வித தடையோ இடைஞ்சலோ செய்யக்கூடாது என இடைக்கால உறுத்து கட்டளை பிறப்பிக்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்:–**

மனுதாரரின் மனு பொய்யானது. நிலை நிற்கதக்கதல்ல. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது தள்ளுபடி ஆகிவிட்ட நிலையில் மேல்முறையீட்டில் தனக்கு எந்த வாதமும் இல்லை என்பதால் மனுதாரர் இவ்வாறான மனுவை தாக்கல் செய்து காலதாமதம் செய்து வருகிறார். மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் தனது வாதுரைகளில் சொல்லாத சங்கதிகளை மனுவில் சொல்லியுள்ளது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல. மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்யும் தேதியில் வாடகைதாரர் என்ற சட்ட நிலையில் இல்லை. மேலும் அவர் Trespasser என்ற சட்ட நிலையில் இருந்து வருகிறார். எனவே மனுதாரருக்கு எவ்வித சட்டப் பாதுகாப்பும்

கிடைக்காது. மேல்முறையீட்டு வழக்கு நிலை நிற்கத்தக்கது அல்ல என்ற நிலையில் மனு தள்ளுபடி செய்யத் தகுந்ததாகும்.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இம்மனுவில் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள்/ எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. தீர்வு:–**

6.1. மனு, எதிர்உரை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுதாரர் பழனி அடிவாரம் மேற்கு கிரி வீதியில் அமைந்துள்ள கல்லலையான் பொது மடத்தின் கடை எண்.1–ல் ஊட்டி காபி பார் என்ற பெயரில் மனுதாரர் டீக்கடை நடத்தி வருகிறார் என்றும், மேற்படி மடத்தின் தலைவர் மனுதாரருக்கு வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான வாடகை ஒப்பந்தத்தை மனுதாரர் இம்மனுவில் ஆவணமாக குறியீடு செய்யவில்லை. மனுதாரர் தரப்பில் 24.04.2025 தேதியிட்ட பழனி அடிவாரம் காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட புகார் மனு ஏற்பு ரசீது, புகைப்படங்கள் மற்றும் குடிநீர் கட்டண ரசீது ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தின் போது மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட புகைப்படங்களை காட்டி கடையின் மேற்கூரையை எதிர்மனுதாரர்கள் இடித்து விட்டதாக சொல்லி வாதிட்டார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் கிரிவல வீதியை சுற்றிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அரசு இடித்து அகற்றிய புகைப்படத்தை மனுதாரர் இம்மனுவில் தாக்கல் செய்துள்ளதாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.2 புகைப்படங்களுக்கு Memory card அல்லது Pendrive எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் அவை எதிலிருந்து பிரிண்ட்

செய்யப்பட்டவை என்பதை நிரூபிக்க சான்று எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி ஆவணத்தில் மூன்று புகைப்படங்கள் உள்ளது. இரண்டு புகைப்படங்களில் 23.04.2025 அன்று மாலை சுமார் 4 மணியளவில் புகைப்படம் எடுக்கப்பட்டதாக தேதி, நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த புகைப்படங்களில் டீ கடையின் முன்பு சிலர் நின்று கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. பிரச்சனை எதுவும் ஏற்பட்டதாக மேற்படி ஆவணத்திலிருந்து தெரிய வரவில்லை. மற்றொரு புகைப்படத்தில் இடிக்கப்பட்ட மேற்கூரை ஒன்று காணப்படுகிறது. அந்த புகைப்படத்தில் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி மற்றும் நேரம் குறிப்பிடப்படவில்லை. பழனி அடிவாரத்தில் கிரிவல வீதியில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டபோது இடிக்கப்பட்டதை, எதிர்மனுதாரர்கள்தான் கூரையை இடித்தார்கள் என பொய்யாகத் தெரிவித்து மேற்படி புகைப்படத்தை தாக்கல் செய்துள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. பழனி அடிவாரம் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட ம.சா.ஆ.1 CSR–ரசீதில் கடையை காலி செய்யுமாறு பிரச்சனை செய்ததாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் கடையின் மேற்கூரையை இடித்ததாக எவ்வித வாசகமும் இல்லை என்பது குறிப்பிடத் தகுந்தது.

6.3. இந்த மேல்முறையீட்டு வழக்கானது கடந்த 05.11.2024 முதல் மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் தரப்பு வாதங்களுக்காக நிலுவையில் உள்ளது. அவ்வாறு இருக்க 05.11.2024 முதல் 10.03.2025 வரை மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்படவில்லை. கால அவகாசம் பெற்று வந்த மேல்முறையீட்டாளர் தரப்பு I.A.No.1/2025 என்ற மனுவை Stay உத்தரவு கோரி தாக்கல் செய்தது. மேல்முறையீட்டாளர் அசல் வழக்கின் வாதியாக இருந்துள்ள நிலையிலும், அசல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையிலும், எதை நிறைவேற்றுவதை Stay செய்ய வேண்டும் என நீதிமன்றம் வினா எழுப்பிய நிலையில் மேற்படி I.A.No.1/2024 மனுவானது மனுதாரர் தரப்பில் வலியுறுத்தப்படாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

6.4. அதன்பின்பும் மனுதாரர் தரப்பில் இரண்டு முறை வாதங்களுக்காக கால அவகாசம் பெற்று விட்டு இந்த இடை மனுவானது மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது மனுதாரரை சட்டப்படி அல்லாமல் பலாத்காரமான

முறையில் வெளியேற்றக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த இடைமனுவும் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இருதரப்பு சாட்சியங்களையும் ஆவணங்களையும் பரிசீலித்து மேல்முறையீட்டு வழக்கின் இருதரப்பு வாதங்களையும் கேட்ட பின்பு தீர்ப்பளிப்பதே சரியானது என்றும், அதற்கு முன்பாக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க தேவையில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. முடிவாக மனுதாரருக்கு அவர் கூறியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என நீதிமன்றம் கருதுகின்றது.

7. முடிவாக, இம்மனுவை தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.09.08 19:42:58 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பு சாட்சி:–** : இல்லை

**மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பு சான்றாவணங்கள் :–**

ம.சா.ஆ.1 – 24.04.2025 தேதியிட்ட புகார் ஏற்புச் சான்று – அசல்

ம.சா.ஆ.2 – புகைப்படங்கள் ( 3 எண்ணிக்கை)

ம.சா.ஆ.3 – 20.06.2025 தேதியிட்ட குடிநீர் கட்டண ரசீது – புகைப்பட நகல்.

**எதிர்மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.09.08 19:43:10 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**